# கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையில் சுகாதாரப் பாதுகாப்பாக பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான விரிவான அறிவுரைகள்

நாட்டின் எதிர்காலம் பிள்ளைகளே ஆவர். அவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைவதால் நாடென்ற வகையில் இந்த நாட்டின் அபிவிருத்தி வருடக்கணக்காகப் பின்தங்கிவிடும். ஆகவே கொவிட் -19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்தி பிள்ளைகளைப் பாதுகாத்து புதிய இயல்புநிலையின் கீழ் பாடசாலைகளை சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தலுக்கு ஏற்ப ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

அதற்கமைய மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரதேசங்களிலும் பாடசாலைகளை 2021 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகளை நடாத்திச் செல்லும்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகள் தொடர்பாகக் கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

**முன்னாயத்த நடவடிக்கைகளில் கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும்.**

- பாடசாலைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான தயார்நிலைகளுக்கு ஏற்ப திட்டங்கள் மற்றும் வழிமுறைகளைத் தயாரித்தல்
- பாடசாலைக்குள் நுழையும் போது கைகளைக் கழுவும் வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் தற்போதுள்ள கைகளைக் கழுவும் இடங்களைப் பயன்படுத்தும் விதத்தில் தயார்படுத்தல்
- தொடர்ச்சியான நீர் வழங்கலைப் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கை எடுத்தல்
- டெங்கு நோய் பரவுதலைத் தவிர்ப்பதற்காகப் பாடசாலை சூழலைத் துப்பரவு செய்தல் மற்றும் நீர் தேங்கும் இடங்களை அகற்றுதல்
- மலசல கூடங்களைத் துப்பரவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்
- கிருமித் தொற்று நீக்கல் திரவம், சவர்க்காரம் அல்லது சவர்க்காரத் திரவம் போன்றவற்றைப் போதுமான அளவில் பெற்றுக்கொள்ளல். அவை தேவைப்படும்போது வழங்குவதற்கான பொறுப்பை ஆசிரியர் ஒருவரிடம் ஒப்படைத்தல்.
- பாடசாலைச் சூழல், வகுப்பறைகளைத் துப்பரவு செய்தல் மற்றும் மேசை, கதிரை என்பனவற்றைத் தொற்றுநீக்கித் துப்பரவு செய்தல்
- கொவிட் -19 தொற்றுநோய் நிலையின் கீழ் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பணிக்குழுவினர் செயற்பட வேண்டிய விதம் குறித்து பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி/ பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை அழைத்து அறிவுறுத்தல்

## சுகாதாரப் பாதுகாப்பான பாடசாலையை நடாத்திச் செல்வதற்காகக் கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள்

- பாடசாலைக்கு மாணவர்கள் வரும்போது முகக்கவசங்களை அணிதல் கட்டாயமாக்கப்படல் மற்றும் பாடசாலைக்குள்ளும் மற்றும் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு செல்லும்வரை முகக்கவசம் அணிதல் கட்டாயமாகுமெனப் பிள்ளைகளை அறியச் செய்தல் மற்றும் அவைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக மேற்பார்வை செய்தல்
- பாடசாலைக்குள் நுழையும்போது அனைத்து மாணவர்கள்/ பணியாளர்களின் உடல் வெப்பநிலையைச் சோதித்து இயல்பான வெப்பநிலை காணப்படின் பாடசாலைக்குள் அனுமதித்தல் மற்றும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் வெப்பநிலை அதிகமான மாணவர்/ பணியாளர் கண்டுபிடிக்கப்பட்டால் ஓய்வெடுப்பதற்காக நோயாளர் அறைக்கு அனுப்பி

மீண்டும் உடல் வெப்பநிலையைச் சோதித்த பின்னர் சுகாதார வைத்திய அதிகாரி/ பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு தெரியப்படுத்தி அறிவுரையைப் பெறுதலும் பெற்றோருக்கு தெரியப்படுத்தலும்.

- மாணவர்கள் பாடசாலைக்குள் நுழையும்போது கைகளைக் கழுவுதலைக் கட்டாயமாக்கிப் பாதணிகளைக் கிருமியழிப்புக்குட்படுத்துதல் மற்றும் அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என அன்றாடம் சோதித்தல்
- பாடலைக்குள் மாணவர்கள் நுழையும்போது மற்றும் பாடசாலையிலிருந்து வெளியேறும்போது ஏற்படும் நெரிசலைத் தவிர்ப்பதற்காகப் பாடசாலையிலுள்ள மேலதிக நுழைவாயில்களை மாணவர்கள் உள்நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் பொருத்தமான வகையில் பயன்படுத்தல்
- பாடசாலையில் மாணவர்கள் ஒன்றுசேர்வதை இழிவாக்கும் விதத்தில் அதனை முகாமைத்துவம் செய்வதற்காக அதிபரின் தலைமையில் மேற்பார்வை வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- அனைத்துப் பாடசாலைகளிலும் குறைந்தபட்சம் ஒரு பாதுகாப்பு உடைத்தொகுதி மற்றும் முகக்கேடயம் (Face Shield) வைத்திருத்தல்
- பாடசாலையில் எந்நிலைமையிலாவது கொவிட் நோய் அறிகுறிகளோடு கூடிய பிள்ளையொருவரைக் காணுமிடத்து சுகாதாரப் பாதுகாப்பான ஆடையணிந்து முகக்கவசத்தோடு கூடிய பணியாளர் ஒருவரினால் அந்தப் பிள்ளையை நோயாளர் அறைக்கு அழைத்துச் சென்று ஓய்வெடுக்கச் செய்வதோடு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி/ பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறியத் தந்து தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல்
- இடைவெளியைப் பேணி மேற்கொள்ளக்கூடிய உடற்பயிற்சிகளை மேற்கொள்ள ஈடுபடுத்துதல், ஏற்புடைய உணவை உட்கொள்ள ஊக்குவித்தல் மற்றும் புகைபொருள், மது, போதைப்பொருள் பாவனையைத் தவிர்க்க மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும். இவை நாட்பட்ட தொற்றா நோய்களைத் தவிர்க்க ஏதுவாகும்.
- பாடசாலை ஆரம்பித்த பின்னர் வெளிநபர்கள் பாடசாலைக்குள் வருவதை இயலுமான அளவு தவிர்த்துக்கொள்வதோடு அவ்வாறு பாடசாலையோடு தொடர்புபடும் வெளிநபர்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தைக் குறிக்கும் ஆவணம் ஒன்று அதிபரினால் முறையாகப் பேணப்பட வேண்டும்.
- பாடசாலை விடுதிகளை நடாத்திச் செல்லல் சுகாதார அதிகாரிகளின் அறிவுரைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட வேண்டும்.
- அது தொடர்பாக அதிபர்/ பிரதி அதிபர் அல்லது உதவி அதிபரின் கீழ் மேற்பார்வைக்குட்பட வேண்டும்.
- யாராயினும் மாணவனொருவர் அல்லது மாணவியொருவர் சுகயீன நிலையைக் காட்டுவாராயின் அம்மாணவரை/ மாணவியை நோயாளர் அறைக்கு அனுப்புவதோடு துரிதமாகச் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவித்து அவரின் அறிவுரைக்கு அமைய நடந்து கொள்ளவேண்டும். அதேபோல அது தொடர்பில் பெற்றோருக்கும் அறியத்தர வேண்டும். அந்த மாணவனை அல்லது மாணவியை அவர் பூரணமாக குணமடைந்ததன் பின்னரே மீண்டும் பாடசாலைக்கு அழைக்கப்பட வேண்டும்.
- பாடசாலையை நடாத்திச் செல்லும்போது அவசர நிலைமையின்போது தொடர்பு கொள்வதற்குத் தேவையான தொலைபேசி இலக்கங்கள் மற்றும் தகவல்களைச் சேகரித்துத் தமது பணிமனையில் காட்சிப்படுத்தல், பாடசாலை முகாமைத்துவக் குழு மற்றும் சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்களை அறியச் செய்தல் (சுகாதார வைத்திய அதிகாரி, பாடசாலைக்குரிய பிரதேசத்துக்குப்

பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொலிஸ் நிலைய அதிகாரி, அண்மித்த வைத்தியசாலை, கிராம அலுவலர், அம்புலன்ஸ் சேவை முதலிய தகவல்கள்)

- விசேட சந்தர்ப்பத்தில் 1390 அழைத்துத் தேவையான அறிவுரைகளைப் பெறுதல்
- நோயாளர் அறையை அடிக்கடி கிருமியழிப்பு செய்து தூய்மையாகப் பேணல்
- பாடசாலைப் போசணை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உணவைப் பெற்றுத்தரும் பாடசாலைகளுக்கான வழங்குநர் தொடர்பாகப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி/ பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் பரிந்துரையைப் பெற்ற பின்னர் உணவு வழங்கும் வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து நடாத்த வேண்டும்
- உணவு வழங்குநரின் வீடுகளில் நபர்கள் சுய தனிமைப்படுத்தலில் உள்ள நிலைமையில் அல்லது இருமல், காய்ச்சல், தடிமன் போன்ற நோய்கள் காணப்படுமாயின் அது தொடர்பாகத் தாமதமின்றித் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் முறைமையொன்று திட்டமிடப்பட்டிருக்க வேண்டும்
- அவ்வாறான வீடுகளிலிருந்து உணவைக் கொண்டு வருதல் தவிர்க்கப்பட வேண்டும். அது போல, அது தொடர்பாகக் கண்காணிப்பு மேற்கொள்ள முறையான வேலைத்திட்டத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்

## கற்றல் கற்பித்தல் செயற்பாடு மற்றும் வகுப்பறை முகாமைத்துவம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை மற்றும் வுகுப்பறை முகாமைத்துவத்தின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயமானது மாணவர்களிடையே சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் முகக்கவசத்தை அணிதல் உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடித்தலாகும்.**

- கீழ்க்காணும் வகையில் தனிநபர் இடைவெளியைப் பேணும் வகையில் வகுப்புகள் நடாத்தப்பட வேண்டும்

| | |
|---|---|
| 15 மாணவர்கள் வரை | தினமும் அனைத்து வகுப்புகளையும் நடாத்தல் |
| 15 - 30 வரையான மாணவர்கள் | வகுப்பின் மாணவர் தொகுதியினரை இரண்டாகப் பிரித்து வாரம் விட்டு வாரம் வகுப்புகளை நடாத்தல் (மாதத்தின் முதலாம் மற்றும் மூன்றாம் வாரம் என்ற முறையில்) |
| 30 மாணவர்களுக்கு அதிகம் | 15 ஆக மாணவர்களைத் தொகுதியாக்கி சமமான தின எண்ணிக்கை அமையும் வகையில் வகுப்புகளை நடாத்தல் |

- மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகுதியினரோடு கூடிய வகுப்பை நடாத்துவதற்கு ஏற்றவாறு நேர அட்டவணையைத் தயாரித்துக்கொள்ள வேண்டும்.

- இடைவெளியோடு கூடியதாக மாணவர்களை வைத்துக்கொள்ள பாடசாலையிலுள்ள அனைத்து வகுப்பறைகளையும் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

- அதுபோல, பாடசாலையில் பொது கற்பித்தல் நிலையத்தைத் தெரிவுசெய்து (பிரதான மண்டபம்/ மாநாட்டு மண்டபம்) பரிந்துரைக்கப்பட்ட இடைவெளி மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட நேரசூசியின்படி அதிகமான மாணவர் எண்ணிக்கைக்கு ஒரே தடவையில் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.
- எப்போதும் வகுப்பறைகளை நன்கு காற்றோட்டம் பெறும்வித்தில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

- மாணவர்களின் கல்வி செயற்பாட்டுக்கு அனுகூலமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை (கருத்தரங்கு/ மீட்டல் அமர்வு) உரிய சுகாதார நியதிகளுக்கு அமைவாக நடத்திக்கொள்ள முடியும்.

- வகுப்பறைகளை எப்போதும் நன்கு காற்றோட்டம் பெறும் வகையில் அமைத்துக் கொள்ளல் மற்றும் திறந்தவெளிகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர்களை ஈடுபடுத்தல்
- மாணவர்கள் முகத்துக்கு முகம் நோக்குவதாக இல்லாதவாறு வகுப்பறையில் அமரச்செய்வதற்கான முறையைத் திட்டமிடுதல்

## பாடசாலை இடைவேளை

- பாடசாலை இடைவேளை, அனைத்து மாணவர்களுக்கும் ஒரே நேரத்தில் கிடைக்காத வகையில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக அதிபரின் விருப்பின் அடிப்படையில் மற்றும் பாடசாலைக்குப் பொருந்தும் வகையில் தயார் செய்து கொள்ளமுடியும்.

- ஆசிரியர்களின் மேற்பார்வையின் கீழ், மாணவர்கள் உணவு உட்கொள்ளும் வேளையில் உணவைப் பகிர்ந்துகொள்ளாமல் இருக்க ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

- எப்பொழுதும் வீட்டிலிருந்து கொண்டுவரப்படும் உணவை உண்பதற்கு ஊக்குவிப்பதோடு, பாடசாலைக்கு வரும் வழியில் உணவு வாங்குவதைத் தவிர்க்கும்படி அறிவுறுத்தல் வழங்கி, அதுதொடர்பாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும்.

- பாடசாலை இடைவேளையின்போது, மாணவர்களுக்கிடையே இடைவெளியைப் பேணுதல், முகக் கவசம் அணிதல் மற்றும் ஒருவரையொருவர் ஸ்பரிசம் செய்யும் விதத்திலான ஆபத்தான விளையாட்டுக்களில் ஈடுபடுவதை தவிர்த்தல் வேண்டும்.

## போக்குவரத்து வசதிகளைப் பாவித்தல்

- நடந்து செல்லும் தூரத்திலோ அல்லது துவிச்சக்கர வண்டியில் செல்லும் தூரத்திலோ உள்ள அனைவரும் நடந்து/ துவிச்சக்கர வண்டியில் பாடசாலைக்குச் செல்வது பாதுகாப்பானது.
- பொதுப் போக்குவரத்து அல்லது பாடசாலைப் போக்குவரத்து சேவையினைப் பயன்படுத்துவதாயின், ஆசன எண்ணிக்கையில் மட்டும் பயணிக்கவும்.
- பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும்போது, வாகனத்திற்குள் ஏறும்போது மற்றும் இறங்கிய பின்னர் கிருமித் தொற்றுநீக்கித் திரவங்களால், உங்கள் கைகளை சுத்தம் செய்தல், வாய், மூக்கு மற்றும் கண்களைத் தொடுவதைத் தவிர்த்தல்.
- போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்தும் போது, வாகனத்தில் குளிரேற்றி (Air conditioner) இல்லாது, ஜன்னல்களைத் திறந்து காற்றோட்டமாக வைத்திருங்கள்.
- வாகனத்திற்குள் முகக்கவசத்தைக் நீக்குதல் மற்றும் உணவு வகைகள் பரிமாற்றம் செய்வதைத் தவிர்க்கவும்.
- வாகனத்தில் ஏறிய பின்னர் உங்களுக்கு உரிய ஆசனத்தில் அமர்வதோடு, வாகனத்திற்குள் தேவையற்ற விதத்தில் நடமாடுவதைத் தவிர்த்தல்.

## சிற்றுண்டிச்சாலைகளைத் திறத்தல்

- மீள் அறிவுறுத்தல் வரும் வரை பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைகளைத் திறப்பதை தவிர்த்தல் வேண்டும்.

## பாடசாலை விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்

- பாடசாலை விளையாட்டு மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக எதிர்காலத்தில் அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

## ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்கள்

கொவிட் 19 வைரஸிலிருந்து தங்களையும் பாதுகாத்துக்கொண்டு, பாடசாலை மாணவர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக உதவிசெய்வது ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் பொறுப்பாகும்.

- பாடசாலை ஆரம்பிக்கப்படும் முதல் நாளில் மாணவர்களின் மனநிலையை மேம்படுத்தவும், கொவிட் 19 இன் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் வகையிலும் ஒரு அன்பான வரவேற்பினை அளித்தல்.

- மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சகல சுகாதார அறிவுறுத்தல்களும் சகல ஆசிரியர்களுக்கும் ஏனைய பணியாளர்களுக்கும் அதேவகையில் செல்லுபடியாகும் அதேவேளை, கைகளைக் கழுவுதல், உடல் வெப்பநிலையைப் பரிசோதித்தல், முகக் கவசம் அணிதல் ஆகியன அவர்களுக்கும் கட்டாயமானதாகும்.

- அதிபரின் அறிவுறுத்தலின் பேரில், பாடசாலை சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான ஆசிரியரினால் நடைமுறைப்படுத்தப்படும் மேற்பார்வை வேலைத்திட்டத்திற்கு சகல ஆசிரியர்களும் முனைப்புடன் பங்குபற்றிப் பொறுப்பேற்க வேண்டும்.

- மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் உளநல ஆரோக்கியம் தொடர்பாகவும் கவனம் செலுத்தி, சமூக இடைவெளியைப் பாதுகாத்துக் கொண்டு உளநல ஆரோக்கியத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பது ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது.

- சமூக இடைவெளி காணப்படும் வேளைகளில் மாத்திரம் முகக்கவசத்தை அகற்ற அனுமதிப்பதன் மூலம் மாணவர்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தடுத்தல்.

- விசேட தேவையுடைய மாணவர்களின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துதல்.

- கிருமிநீக்கி கரைசல்களை பயன்படுத்தும்போது அவற்றை பாதுகாப்பாக கையாளும்முறை பற்றி மாணவர்களை தெளிவூட்டுதல்

- தொலைக்கல்வியோடு ஒப்படும்போது நேரடியான பாடசாலைக்கல்வியூடாக நல்ல பெறுபெறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை பெற்றோரை தெளிவூட்டுவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

# மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

நிலவும் சவால்களுக்கு முகங்கொடுத்து சுகாதாரப் பாதுகாப்பான முறையில் கல்வியைத் தொடர்வது தங்களின் பொறுப்பாகும்.

- பாடசாலைக்குள் பிரவேசிக்கும் போது, சவர்க்காரம் இட்டுக் கைகளைக் கழுவுதல் மற்றும் பாதணிகளைக் கிருமித் தொற்றுநீக்கத்திற்கு உட்படுத்துதல்.
- சமூக இடைவெளியைப் பேணுதல்.
- புத்தகங்கள், பேனைகள் போன்றவற்றைப் பகிர்வதைத் தவிர்த்தல்
- பாடசாலை நேரத்திற்குள் கட்டாயமாக முகக்கவசம் அணிதல் மற்றும் மேலதிக முகக்கவசம் ஒன்று புத்தகப்பையில் வைத்திருத்தல்.
- கிருமித் தொற்றுநீக்கல் திரவங்களைக் (Sanitizer) கொண்டு வருதல் மற்றும் தேவையானபோது அவற்றைப் பாவித்தல்.
- பாடசாலையில் அதிக நேரம் முகக்கவசங்களை அணிய முடியாத, சிரமமிக்க மாணவர்கள் முகக்கேடயம் (Face Shield) பாவித்தல்.
- உணவு அருந்தும் போது அல்லது வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் தற்காலிகமாக முகக் கவசத்தைக் அகற்றி சுத்தமான பையொன்றில் வைத்தல் அல்லது அணிந்திருக்கும் சீருடையில் வைத்திருத்தல். முகக்கவசங்களை ஒருபோதும் பொது இடங்களில் வைக்கக்கூடாது.
- இருமல் மற்றும் தும்மல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் முழங்கையால் வாய் மற்றும் மூக்கை மறைத்துக்கொள்ளல் அல்லது திசு கடதாசியினால் பயன்படுத்தல் மற்றும் உரிய முறையல் அவற்றை அகற்றுதல்
- உணவு அருந்துவதற்காக அல்லது வேறு தேவைகளுக்காக தற்காலிகமாக முகக்கவசங்களை அகற்றிய பின் மீண்டும் அணியும் போது, கைகளை நன்றாகக் கழுவிய பின் மீண்டும் அணிதல் மற்றும் பிற நபர்களின் முகக் கவசங்களை ஒருபோதும் பயன்படுத்தாதிருத்தல்.
- வகுப்பறையை விட்டு வெளியேறி பின் மீண்டும் வகுப்பறைக்குள் வரும் போது எந்தவொரு மேற்பரப்பையும் தொட்டதன் பின்னர் கைகளைக் கழுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- உணவு மற்றும் தண்ணீர்ப் போத்தல்களை பரிமாற்றிக் கொள்வதைத் தவிர்த்தல்.
- பாடசாலைக்குள் மற்றும் வெளியில் குழுக்களாகச் சேர்ந்திருப்பதைத் தவிர்த்தல்.
- பாடசாலை நிறைவடைந்தவுடன் வீடுகளுக்குச் செல்லுதல் வேண்டும்.

- பாடசாலைக்கு வரும்போது மற்றும் வீடுகளுக்குச் செல்லும்போது பயன்படுத்தும் தனிப்பட்ட அல்லது பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் சுகாதார அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்தல்.
- தங்களுக்கு ஏதேனும் நோய், காய்ச்சல், சளி போன்ற நோய் நிலைகள் காணப்படின், அந்நிலை குணமாகும் வரை பாடசாலைக்கு வருவதைத் தவிர்த்தல்.
- தங்கள் வீட்டில் யாரேனும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது கொவிட் 19 நோயாளியுடன் தொடர்புபட்டிருந்தால் சுகாதார அறிவுறுத்தல்களின் படி மீள அறிவிப்பு வரும்வரை பாடசாலைக்கு வராதிருத்தல்.
- பாடசாலையில் அல்லது அதற்கு வெளியில் தேவையற்றவிதத்தில் எப்பொருளையும் தொடுவதைத் தவிர்த்தல்.

## பெற்றோர்களுக்கான அறிவுறுத்தல்கள்

தங்கள் பிள்ளைகளினதும் தங்களினதும் ஆரோக்கியத்திற்குப் பொறுப்பாக இருத்தல் மற்றும் பாடசாலையை சுகாதாரமான முறையில் வைத்திருப்பது அதற்கு உதவுவது பெற்றோரின் பொறுப்பாகும்.

- இருமல், சளி அல்லது காய்ச்சல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல்.
- வீட்டில் வேறு யாரேனும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல்.
- வீட்டிலுள்ள ஒருவர் அல்லது பிள்ளைக்கு பீ.சீ.ஆர் பரிசோதனை/ துரித பிறபொருளெதிரி சோதனை (Rapid Antigen Test) செய்யப்பட்டிருந்தால் அவ் அறிக்கையின்படி சுகாதார அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறும் வரை பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பாதிருத்தல்.
- தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் இருந்து ஏனைய பிரதேசங்களில் உள்ள பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பாதிருத்தல்.
- தங்கள் பிள்ளை பயன்படுத்தும் உபகரணங்கள் (பாடசாலைப் பை/ தண்ணீர்ப் போத்தல்/ சாப்பாட்டுப் பெட்டி/ புத்தகங்கள் போன்றன) சுத்தப்படுத்துதல் அல்லது வெயிலில் இட்டு உலர்த்துதல்.
- தினந்தோறும் பிள்ளையின் ஆடைகள் மற்றும் பாதணிகளைச் சுத்தம் செய்தல்.
- பாடசாலைக்குச் சென்று திரும்பியதும் பிள்ளையின் கைககளைக் கழுவுதல் மற்றும் பிள்ளையைச் சுத்தமாக இருக்கச் செய்தல்.

- பாடசாலை விட்டு வந்ததும் காலணிகளை வெளியே கழற்றிவிட்டு உள்ளே வருதல்
- பாவித்த முகக் கவசங்களை எரித்தல்
- தும்மும்போது பயன்படுத்திய திசு கடதாசிகளை மூடிய பாத்திரம்ஒன்றில் சேகரித்து பின்னர் எரித்து விடுதல்
- வீட்டில் சமைத்த உணவுகளை மாத்திரம் பிள்ளைக்குக் கொடுப்பதோடு, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிள்ளை பயன்படுத்தும் பொருட்களை தனிப்பட்ட முறையில் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- பாடசாலை நிறைவடைந்தவுடன் பிள்ளையை வீட்டிற்கு வரும்படி அறிவுறுத்தல் வழங்குதல்/ அழைத்துக்கொண்டு வருதல்.
- பாடசாலைக்கு வரும்போது மற்றும் வீடுகளுக்குச் செல்லும் போது பயன்படுத்தும் தனிப்பட்ட அல்லது பொது போக்குவரத்துச் சேவைகளில் சுகாதார அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்குதல்.
- தங்கள் பிரதேசத்தில் சுகாதாரம் தொடர்பாக ஏதேனும் சிக்கல் இருந்தால் அது தொடர்பாக அதிபருக்கு அறிவிப்பதன் மூலம் பாடசாலைக்கு எற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் குறைக்க உதவுதல்.

## பொது அறிவுறுத்தல்

இந்த விடயத்தை உரியவாறு மேற்கொள்வது அதிபரின் பொறுப்பாகும்.

- அதிபரால் பாடசாலையில் முன்னாயத்த செயற்பாடுகள் திருத்தமாக இந்த அறிவுறுத்தல் கையேட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டு அவை குறித்து சம்பவத்திரட்டில் குறிப்பிடல்.

- கொவிட் 19 பரவுதலைத் தவிர்ப்பதற்காக அதிபரின் தலைமையில் பாடசாலைச் சுகாதார மேம்பாட்டுக் குழுவை முனைப்பாக முன்னெடுத்தல் மற்றும் சுகாதார மேம்பாட்டு வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பான பிரதி அதிபர்/ ஆசிரியரொருவரின் தலைமையில் தொடர்ச்சியாகக் கண்காணிப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

- கொவிட் 19 பரவுதலைத் தவிர்க்கும் வேலைத்திட்டத்துக்காக கல்வி அமைச்சின் இடையீட்டில் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதி, பொருட்கள் அல்லது உபகரணங்கள் தொடர்பாக மற்றும் பாடசாலையை பாதுகப்பாக ஆரம்பித்தல் தொடர்பில் பெற்றுக் கொடுக்கப்பட்ட அறிவுறத்தல்கள் தொடர்பாக உரியவாறு பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களை அறியச் செய்வதனூடாக அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தல்.

- பாடசாலையை ஆரம்பிக்கும் முன்னர் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்து கொள்வதற்காக மேற்கொண்ட ஆவணங்களைப் பூர்த்திசெய்து அதிபரின் கையொப்பத்துடன் கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி அதன் பிரதிகளைப் பாடசாலையில் வைத்திருத்தல் (இணைப்பு 01)

- பாடசாலையை ஆரம்பித்த பின்னர் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மேற்கொண்ட ஆவணங்களை அன்றாடம் பூர்த்தி செய்தலை ஆசிரியர்களுக்கு ஒப்படைத்து வாரத்துக்கு ஒரு தடவை அதிபரின் கையொப்பத்துடன் கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்குதலும் பிரதிகளைப் பாடசாலையில் வைத்துக்கொள்ளலும் (இணைப்பு 02)

- மாணவர்களை சுகாதாரப் பாதுகாப்புடன் பாடசாலைக்கு அனுப்பும்போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகப் பெற்றோர்களை அறியத்தருவது தொடர்பாகப் பொருத்தமான முறைமையொன்றை உருவாக்குதல்

- இருமல், தடிமன் அல்லது காய்ச்சல் போன்ற நோயறிகுறிகள் இருக்குமாயின் அல்லது வீட்டில் வேறொரு உறுப்பினர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பின் அல்லது குடும்ப உறுப்பினரின் அல்லது பிள்ளையின் பி.சீ.ஆர் பரிசோதனை/ துரித பிறபொருளெதிரிப் பரிசோதனை (Rapid Antigen Test) மேற்கொள்ளப்பட்டிருப்பின் அந்த அறிக்கைக்கு அமைய சுகாதார அறிவுறுத்தல் பெற்றுக் கொள்ளப்படும் வரை பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாமெனப் பெற்றோர்களை அறிவுறுத்தல்

- சுகயீன நிலை காரணமாக வீட்டில் தங்கியிருக்கும் மாணவர்களுக்காக அன்றாட கல்வி நடவடிக்கைகள் தவறவிடப்படாதவாறு முறைமையொன்றைத் தயார் செய்வதன் ஊடாகப் பிள்ளையை வீட்டிலேயே தங்கியிருக்கச் செய்யப் பெற்றோர்களைத் தூண்டுதல்

- பாடசாலைக்கு மாணவர்கள் வரும் பஸ் வண்டிகள் மற்றும் வேன் வாகனங்கள் தொடர்பாகத் தகவல்களைச் சேகரித்துக்கொள்வதற்கான முறைமையொன்றைத் தயார்செய்தல்

- அடிக்கடி கையாளும் பொருட்களைத் தொற்றுநீக்கம் செய்தல், கைப்பிடிகள், கதவுத் திருகிகள் என்பவற்றை அடிக்கடி தொற்றுநீக்கம் செய்வதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

மேற்குறித்த அறிவுரைகளுக்கு அமைய முறையாகப் பாடசாலையை நடத்திச் செல்வதும் மாணவ மாணவியரின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதும் அதிபரின் கடமைப் பொறுப்பாக அமைவதோடு, இந்நடைமுறைகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதும், கண்காணிப்பு அறிக்கைகளைப் பேணிவருதினூடாக சுகாதாரப் பாதுகாப்பான பாடசாலையாக்குவது பாடசாலைச் சமுகம், கோட்டக் கல்வி காரியாலயம், வலயக் கல்விக் காரியாலயம் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தலைவர்களின் பொறுப்பாகும் என்பதைத் தயவு செய்து கவனத்திற் கொள்ளவும். இந்நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்து கோட்டம், வலயம் மற்றும் மாகாண காரியாலயங்களினால் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும்.